# இந்திய இராணுவத்தின் பிரமிக்கத்தக்க செயல்பாடுகள்!

## பாகிஸ்தான் தீவிரவாத முகாம்கள் அழிப்பு! நடுவானில் ட்ரோன்கள் மீது தாக்குதல்!

**ஜம்மு, மே 11 -**

**காஷ்மீர், பஞ்சாப் உள்ளிட்ட பகுதிகளில் தாக்குதல் நடத்திய பாகிஸ்தானுக்கு மூன்றாவது நாளாக இந்தியா பதிலடி கொடுத்துள்ளது. பாகிஸ்தானின் 3 விமான தளங்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ள இந்திய ராணுவம், எல்லையை ஒட்டியுள்ள தீவிரவாத முகாம்களை தாக்கி அழித்துள்ளது.**

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள தீவிரவாத முகாம்களை இந்தியா தாக்கி அழித்தது. இந்நிலையில் இந்தியா மீது பாகிஸ்தான் ட்ரோன் தாக்குதல்களை தொடங்கியது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியா அதிரடி தாக்குதல்களை நடத்தி வருகிறது. பாகிஸ்தானில் இருந்து காஷ்மீர், பஞ்சாப் உள்ளிட்ட பகுதிகளை நோக்கி வீசப்படும் ட்ரோன்கள், ஏவுகணைகளை இந்திய ராணுவம் தாக்கி அழித்து வருகிறது. பாகிஸ்தானின் இஸ்லாமாபாத், ராவல்பிண்டி, லாகூர் ஆகிய 3 முக்கிய இடங்களில் உள்ள விமான தளங்களை இந்தியா தாக்கி அழித்துள்ளது. லாகூர், ஷோர்கோட், ஜாங், மற்றும் ராவல்பிண்டி உள்ளிட்ட நகரங்களை குறிவைத்து ட்ரோன்கள் மூலம் தாக்கி இந்தியா பதிலடி கொடுத்தது.



இந்தியா நடத்திய டிரோன் தாக்குதலில் பாகிஸ்தான் நாட்டின் ராவல்பிண்டியில் உள்ள கிரிக்கெட் மைதானத்தின் முன் பகுதியில் கட்டிடத்தில் இருந்த கண்ணாடிகள் நொறுங்கின.

இதேப்போல் இந்தியா பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் உள்ள தீவிரவாத முகாம்களையும் இந்திய ராணுவம் அழித்துள்ளது. தீவிரவாத முகாம்களில் இருந்து காஷ்மீரில் உள்ள அப்பாவி பொதுமக்களை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து இந்திய ராணுவம் எல்லை கட்டுப்பாட்டு பகுதியை ஒட்டியிருந்த தீவிரவாதிகளின் கட்டமைப்பை அழித்துள்ளது. இது தொடர்பான வீடியோவையும் இந்திய ராணுவம் வெளியிட்டுள்ளது.

### கொல்லப்பட்ட பாகிஸ்தான் தீவிரவாதிகள்!

மே 7 ஆம் தேதி பாகிஸ்தான் மீது இந்தியா நடத்திய தாக்குதலில் உயிரிழந்த தீவிரவாதிகளின் விபரங்களை, ஒன்றிய பாதுகாப்புத்துறை வெளியிட்டுள்ளது.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக, மே 7 ஆம் தேதி பாகிஸ்தானில் பல்வேறு தீவிரவாத முகாம்கள் மீது இந்திய போர் விமானங்கள் குண்டுமழை பொழிந்தன. இந்த தாக்குதலில் பாகிஸ்தானில் செயல்படும் தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதோடு, முக்கிய தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். இந்நிலையில், இந்தியா நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட, முக்கிய தீவிரவாதிகளின் பெயர்களை ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. (gfx in) அதில், ஜெய்ஷ் இ முகமது இயக்கத்தை சேர்ந்த தீவிரவாதி முகமது அசார் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தீவிரவாதி மவுலானா மசூத் அசாரின் மைத்துனர் ஹபீஸ் முகமது ஜமீலும் உயிரிழந்துள்ளார். இதேபோன்று, ஜம்மு, காஷ்மீரில் ஏற்கனவே நடத்தப்பட்ட பல்வேறு தாக்குதல்களில் தொடர்புடைய காலித் என்ற தீவிரவாதியும் கொல்லப்பட்டார். ஜெய்ஸ்இமுகமது அமைப்பைச் சேர்ந்த முகம்மது யூசுப் அசாரும் இந்தியா நடத்திய தாக்குதலில் பலியானதாக, ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மே 7ல் பாகிஸ்தானின் தீவிரவாத முகாம்கள் மீது இந்தியா தாக்குதலில் உயிரிழந்த தீவிரவாதிகளின் விவரங்கள் வெளியீடு ஜெய்ஷ் இ முகமது இயக்கத்தை சேர்ந்த தீவிரவாதி முகமது அசார் கொல்லப்பட்டதாக அறிவிப்பு தீவிரவாதி மவுலானா மசூத் அசாரின் மைத்துனர் ஹபீஸ் முகமது ஜமீலும் உயிரிழந்ததாக அறிவிப்பு ஜம்மு, காஷ்மீரில் ஏற்கனவே நடத்தப்பட்ட பல்வேறு தாக்குதல்களில் தொடர்புடையவர் காலித் ஜெய்ஸ்இமுகமது அமைப்பைச் சேர்ந்த முகமது யூசுப் அசாரும் இந்தியா நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டார்.

### இஸ்லாமாபாத்தில் பெட்ரோல் பங்குகள் மூடல்! பாகிஸ்தானில் வாகன ஓட்டிகள் அவதி!

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக இஸ்லாமாபாத்தில் பெட்ரோல் பங்குகள் மூடப்பட்டுள்ளதால், பாகிஸ்தானில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தியா பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வரும் நிலையில் அடுத்த 48 மணி நேரத்துக்கு இஸ்லாமாபாத் எல்லைக்கு உட்பட்ட அனைத்து இடங்களிலும் பெட்ரோல் பங்குகள் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் பற்றாக்குறையை அடுத்து இஸ்லாமாபாத்தில் பெட்ரோல் பங்குகளை பாகிஸ்தான் அரசு மூட உத்தரவிட்டுள்ளது. ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் சிக்கி வரும் பாகிஸ்தானில் தற்போது பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு பெட்ரோல் பங்குகளை மூட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள தாக தகவல் வெளியாகி உள்ளது.

### பாகிஸ்தான் ஏவுகணைகள் கண்டெடுப்பு!

இந்தியா மீது பாகிஸ்தான் வீசிய ஏவுகணை தாக்குதலின் உதிரி பாகங்கள் ராஜஸ்தான் மாநிலத்தில் மீட்கப்பட்டு வருகின்றன.

பாகிஸ்தான், இந்தியாவின் குடியிருப்புகளை நோக்கி தாக்குதல் நடத்திவருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த நிலையில், ராஜஸ்தான் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், பாகிஸ்தான் ஏவுகணைகளை வீசி தாக்கி உள்ளது. பார்மெர் பகுதியில் கிடந்த ஏவுகணை உதிரிபாகத்தை இந்திய பாதுகாப்புப் படை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். இதேபோல், பொக்ரானிலும், பாகிஸ்தான் வீசிய ஏவுகணை பாகங்கள் மீட்கப்பட்டு உள்ளது.



### பிரதமர் - ராஜ்நாத் சிங் ஆலோசனை!

பாகிஸ்தான் உடனான மோதல் குறித்து பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோருடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.

இந்தியாவின் எல்லையோர பகுதிகளில் மக்கள் வசிக்கும் பகுதிகளை குறிவைத்து பாகிஸ்தான் நடத்திய டிரோன் தாக்குதல்களை இந்திய ராணுவம் முறியடித்துள்ளது. கடந்த மூன்று தினங்களாக எல்லைப்பகுதியில் பாகிஸ்தானின் அத்துமீறல் நீடித்து வருகிறது. இதனால், எல்லையோர மாநிலங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு, மக்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு பதிலடியாக, பாகிஸ்தானின் விமானப்படை தளங்களை குறிவைத்து இந்தியா தாக்குதல் மேற்கொண்டது. எல்லையில் நிலவும் சூழல் குறித்து பிரதமர் மோடியை சந்தித்து தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், முப்படைகளின் தளபதிகள் விளக்கம் அளித்தனர். இந்நிலையில், அடுத்து கட்ட நடவடிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோருடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.

### முப்படை தலைமைத் தளபதிகள் ராஜ்நாத் சிங்குடன் சந்திப்பு!

பாகிஸ்தான் தாக்குதல்களை இந்திய படைகள் வெற்றிகரமாக முறியடித்து வரும் நிலையில், அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன், முப்படைகளின் தலைமை தளபதி ஆலோசனை நடத்தினார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை, டெல்லியில் உள்ள அவரது இல்லத்தில், முப்படைகளின் தலைமை தளபதி அனில் சவுகான் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இந்தியா, பாகிஸ்தான் இடையேயான போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கூறப்படுகிறது. இந்தியாவின் 36 இடங்களை குறிவைத்து பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், துருக்கி மற்றும் சீனாவிடம் இருந்து பெறப்பட்ட ஏவுகணை பாகிஸ்தான் ஏவியுள்ளது குறித்தும், அதனை இந்திய ராணுவம் துல்லியமாக தடுத்து நிறுத்தி பெரும் சேதங்களை தவிர்த்ததும் குறித்தும் இந்த சந்திப்பின்போது, முப்படைகளின் தலைமை தளபதி விளக்கியதாக கூறப்படுகிறது.

### அமெரிக்க அமைச்சர் பேச்சுவார்த்தை!

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, பாகிஸ்தான் ராணுவத் தளபதி அசிம் முனீர் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரை தொடர்பு கொண்டு, போர்ப் பதற்றத்தை தணிக்குமாறு வலியுறுத்தினார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

அமைச்சர் மார்கோ ரூபியோ பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இஷாக் தார் மற்றும் ராணுவத் தளபதி அசிம் முனீர் ஆகியோரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இந்தியாவுடனான போர்ப் பதற்றத்தை தணிக்குமாறு வலியுறுத்தியதாகவும், இவ்விவகாரத்தில் இரு நாடுகளுக்கும் இடையே ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளைத் தொடங்க அமெரிக்கா உதவி செய்ய தயாராக உள்ளதாக கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடந்து இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை தொடர்பு கொண்ட மார்கோ ரூபியோ, இந்தியாவும் பாகிஸ்தானுடன் மோதல் போக்கை கைவிடுவதன் அவசியம் குறித்து வலியுறுத்தியதாகவும் வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

### இந்திய வெளியுறவு அமைச்சருடன் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் பேச்சுவார்த்தை!

அமெரிக்க அமைச்சர் மார்கோ ரூபியோ பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இஷாக் தார் மற்றும் ராணுவத் தளபதி அசிம் முனீர் ஆகியோரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு,

இந்தியாவுடனான போர்ப் பதற்றத்தை தணிக்குமாறு வலியுறுத்தியுள்ளார்

இவ்விவகாரத்தில் இரு நாடுகளுக்கும் இடையே ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளைத் தொடங்க அமெரிக்கா உதவி செய்ய தயாராக உள்ளதாக கூறியுள்ளார் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரைதொடர்பு கொண்ட மார்கோ ரூபியோ, இந்தியாவும் பாகிஸ்தானும் மோதல் போக்கை கைவிடுவதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார்.

### ஜி7 நாடுகள் வேண்டுகோள்!

இந்தியா பாகிஸ்தான் இடையே மோதல் போக்கு அதிகரித்து வரும் நிலையில், இரு நாடுகளும் மிகுந்த நிதானத்தைக் கடைபிடிக்க வேண்டும் என ஜி7 நாடுகளின் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஜி7 அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஏப்ரல் 22 அன்று பஹல்காமில் நடந்த கொடூரமான தீவிரவாத தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாகவும், இந்தியாவும் பாகிஸ்தானும் அதிகபட்ச நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இராணுவ மோதல்கள் பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்றும், இரு நாடுகளிலும் உள்ள பொதுமக்களின் பாதுகாப்பில் ஜி7 அக்கறை கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் பதற்றத்தை உடனடியாகக் குறைக்க இருநாடுகளுக்கும் ஜி7 அழைப்பு விடுப்பதாகவும், அமைதியான முடிவை நோக்கி இரு நாடுகளும் நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபட வலியுறுத்துவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சர்வதேச நிதியம் நடவடிக்கை! காஷ்மீர் முதலமைச்சர் கண்டனம்!

பாகிஸ்தானுக்கு நிதியுதவி செய்தால் போர் பதற்றம் எப்படி குறையும்? என, ஜம்மு, காஷ்மீர் முதலமைச்சர் உமர் அப்துல்லா கேள்வி எழுப்பியுள்ளார்.

பாகிஸ்தானுக்கு புதிய கடன்கள் வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தில் நடந்த வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்தது. இந்தியாவின் எதிர்ப்பையும் மீறி 8 ஆயிரத்து 542 கோடி ரூபாயை பாகிஸ்தானுக்கு கடனாக வழங்க சர்வதேச நாணய நிதியம் முடிவு செய்துள்ளது.

இந்த நிலையில், பாகிஸ்தானிற்கு நிதியுதவி வழங்கும் சர்வதேச நாடுகள், சர்வதேச நாணய நிதியத்திற்கு ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா கேள்வி எழுப்பியுள்ளார். இந்தியா மீது தொடர் தாக்குதல் நடத்தி வரும் பாகிஸ்தானுக்கு நிதியுதவி செய்தால் போர் பதற்றம் எப்படி குறையும்? இந்தியா மீது பாகிஸ்தான் நடத்தும் தாக்குதல்களுக்கு இந்தியா பதில் தாக்குதல் மட்டுமே நடத்தி வருகிறது.

இந்தியாவின் அப்பாவி மக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தும் பாகிஸ்தானுக்கு சர்வதேச நாடுகள் நிதி கொடுத்து உதவக்கூடாது என்று கூறியுள்ளார்.

### பாகிஸ்தானின் வதந்தி!

வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, கர்னல் சோபியா குரேஷி மற்றும் விங் கமாண்டர் வியோமிசிங் ஆகியோர் பாகிஸ்தானுடனான போர் குறித்து விளக்கம் அளித்தனர். இந்திய குடியிருப்புகள் மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வருவதாகவும், பாகிஸ்தானின் தீவிரவாத மற்றும் ராணுவ நிலைகள் மீது மட்டுமே இந்தியா தாக்குதல் நடத்தியதாகவும் கர்னல் சோபியா குரேஷி, தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து பேசிய விங் கமாண்டர் வியோமிகா சிங், எதிரிகளின் வான் தாக்குதலை தடுத்து அழிக்கும் எஸ் 400 அமைப்பு குறித்து தவறான தகவல்களை பாகிஸ்தான் பரப்பி வருகிறது என்றார். அவர்களை தொடர்ந்து பேசிய வெளியுறவுச் செயலாளர் விக்ரம் மிஸ்ரி, இந்தியாவின் விமானப் படை தளங்களை தாக்கி அழித்ததாக பாகிஸ்தான் கூறுவது முற்றிலும் பொய் என விளக்கம் அளித்தார்.

பாகிஸ்தான் தரப்பில், இதேபோன்று பல்வேறு பொய் செய்திகளை பரப்புவதாக குற்றம்சாட்டிய அவர், மருத்துவ மற்றும் பள்ளி கட்டமைப்புகள் மீது பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்துவதாகவும், டிரோன் மற்றும் ஏவுகணைகளை வீசுவதாகவும் விக்ரம் மிஸ்ரி தெரிவித்தார். எனினும், அனைத்து தாக்குதல்களுக்கும் தக்க பதிலடி கொடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.



### பஞ்சாப்பில் சிக்கித் தவித்த 12 கல்லூரி மாணவர்கள்!

## தமிழ்நாடு அரசு உதவியுடன் சென்னை திரும்பினர்!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு மாணவர்கள் நன்றி!

சென்னை, மே 11 -

பஞ்சாப்பில் சிக்கி தவித்த 12 கல்லூரி மாணவர்கள் தமிழ்நாடு அரசு உதவியால் சென்னை திரும்பினர். பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்லூரியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், மாணவர்கள் அனைவரும் தமிழ்நாடு திரும்ப முடிவு செய்தனர்.

இதையடுத்து, பஞ்சாபில் சிக்கி தவித்த, மாணவர்களை மீட்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார். அதன்படி, பஞ்சாபிலிருந்து 12 மாணவர்கள் தமிழ்நாடு அரசு உதவியுடன் நேற்று முன்தினம் டெல்லி அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் டெல்லியிலிருந்து விமானம் மூலம் சென்னை திரும்பினர். அவர்களை அமைச்சர் நாசர் மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர். தங்களை தமிழ்நாடு அழைத்து வர உதவிய முதலமைச்சருக்கு மாணவர்கள் நன்றி தெரிவித்தனர்.